# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. மல்லிகை

1. மல்லிகை வெள்ளை நிறத்தில் இருக்கும்.
2. மல்லிகைப் பூவை பெண்கள் தலையில் சூடிக்கொள்வர்.
3. மல்லிகை பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய மலர் ஆகும்.

## 2. மாதங்கள்

1. தமிழ் மாதங்கள் மொத்தம் பன்னிரண்டு.
2. தைமாதத்தில் பொங்கல் விழா கொண்டாடுவர்.
3. தமிழ் மாதங்களை எழுது.

## 3. பறவை

1. பறவை கூடு கட்டி வாழும்.
2. பறவைகள் தானியங்களை உணவாக உண்ணும்.
3. பறவைகள் பறப்பது அழகாக இருக்கும்.

## 4. பாகற்காய்

1. பாகற்காய் பச்சை நிறத்தில் இருக்கும்.
2. பாகற்காய் கசப்பு சுவையுடையது.
3. பாகற்காய் உடலுக்கு நல்லது.

## 5. வரை

1. ஓவியப் போட்டியில் முயல் வரைந்தேன்.
2. குமரன் ஓவியக் கல்லூரிக்குச் சென்றான்..
3. நான் வண்ணத்துப்பூச்சி வரைவேன்.